சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலத்துறை - 2023-2024 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கை அறிவிப்பு வேளாண்மை - உழவர் நலன் – பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை, இதர அரசுத் துறைகள் பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து செயல்படும் விதமாக ஆணை –வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை-உழவர் நலத் (வேபொ2) துறை

சோபகிருது வருடம், கார்த்திகை 12 ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2054

அரசாணை (நிலை) எண்.259 நாள் : 28.11.2023

படிக்க

1. மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2023-2024 வேளாண் நிதிநிலை அறிவிப்புகள் நாள் 21.03.2023.
2. வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.மாதி1/55673/2023, நாள் 17.05.2023 மற்றும் 03.11.2023.

---------

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2023-24 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் வரிசை எண்.15-ல் 'பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு' எனும் தலைப்பில் கீழ்க்கண்ட திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது:-

**" கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன்மலை, சேலம் மாவட்டம் சேர்வராயன் மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் பச்சை மலை, தருமபுரி மாவட்டம் வத்தல் மலை, சித்தேரி, திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை, திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, ஈரோடு மாவட்டம் தாளவாடி, பர்கூர், குதியாலத்தூர் உள்ளிட்ட பல்வேறு மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின விவசாயிகளுக்கு அனைத்து**

வகையிலும் உதவும் வகையில் வேளாண்மை உழவர் நலத்துறையானது பழங்குடியினர் நலத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வனத்துறை பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் (LAMPS), தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றோடு இணைந்து செயல்படுத்தப்படும்"

2. பார்வை 2ல் படிக்கப்பட்ட வேளாண்மை ஆணையர் அவர்களின் 03.11.2023 நாளிட்ட திருந்திய கருத்துருவில், 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில் 8.42 இலட்சம் மக்கள் பழங்குடியின வகுப்பைச் சார்ந்தவர்கள். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.17 சதவீதமாகும். இவர்களில் 94,628 பழங்குடியின விவசாய குடும்பங்கள் 75,360 எக்டர் பரப்பளவில் விவசாயம் செய்து வருகின்றனர். இது மொத்த சாகுபடிப் பரப்பளவான 59.71 இலட்சம் எக்டரில் 1.26 சதவீதமாகும். இவர்களில் 92 சதவீத பேர் அதாவது 86,944 விவசாயிகள் சிறு, குறு விவசாயிகளாக மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

தமிழ்நாட்டில் சேலம் திருவண்ணாமலை, திருப்பத்தூர், திருச்சி, கள்ளக்குறிச்சி, தருமபுரி, நாமக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளிலும் மற்றும் இதர பகுதிகளிலும் பெரும்பாலான பழங்குடியின விவசாயிகள் வசித்து வருகின்றனர். தமிழ்நாடு அரசு பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை ஆகிய துறைகளின் வாயிலாக பல நலத் திட்டங்களை ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தி வருகிறது. அனைத்து திட்டங்களிலும் பழங்குடியின விவசாயிகளுக்காக முன்னுரிமையும் உரிய நிதி ஒதுக்கீடுகளும் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மலைப்பகுதிகளில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், பருத்தி போன்ற வேளாண்மை பயிர்கள் மற்றும் மிளகு, காபி மற்றும் மரவள்ளி போன்ற தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மேலும், இப்பகுதிகளில் வேளாண்மை உழவர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, பழங்குடியினர் நலத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மற்றும் வனத்துறை ஆகிய துறைகளின் முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

| வ.எண் | மலைப்பகுதியின் பெயர் | மொத்த பழங்குடியினர் எண்ணிக்கை | பழங்குடியின விவசாயிகளின் எண்ணிக்கை | மொத்த வேளாண் பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 1. | ஏலகிரி, திருப்பத்தூர் மாவட்டம் | 8786 | 759 | 917 |
| 2. | கல்வராயன்மலை, கள்ளகுறிச்சி மாவட்டம் | 45176 | 11077 | 12171 |
| 3. | சித்தேரி தர்மபுரி மாவட்டம் | 10264 | 2116 | 2988 |
| 4. | வத்தல்மலை, தர்மபுரி மாவட்டம் | 2111 | 700 | 435 |
| 5. | கொல்லி மலை, நாமக்கல் மாவட்டம் | 40479 | 13315 | 12026 |
| 6. | பச்சைமலை, திருச்சி மாவட்டம் | 10424 | 3679 | 4056 |
| 7. | தாளவாடி, ஈரோடு மாவட்டம் | 1685 | 352 | 287 |
| 8. | பர்கூர், ஈரோடு மாவட்டம் | 2240 | 69 | 65 |
| 9. | குதியாலத்தூர், ஈரோடு மாவட்டம் | 2540 | 188 | 154 |
| 10. | ஜவ்வாது மலை, திருவண்ணா மலை மாவட்டம் | 97943 | 13948 | 8064 |
| 11. | கல்வராயன் மலை, சேலம் மாவட்டம் | 31515 | 5653 | 6821 |
| 12. | சேர்வராயன் மலை, சேலம் மாவட்டம் | 28118 | 4890 | 17283 |

<u>பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக துறைவாரியாக செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்கள்:</u>

I. வேளாண்மை - உழவர் நலத்துறை:

i. பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு உயர் மதிப்பு திட்டங்களில் கூடுதலாக 20 சதவிகித மானியம்

2023-24-ம் நிதியாண்டில் பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வேளாண் இயந்திரங்கள், மதிப்புக் கூட்டு இயந்திரங்கள், சூரிய சக்தி பம்பு செட்டுகள், சூரியசக்தி உலர்த்திகள், குளிர் சாதனக் கிடங்குகள், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக் குடில், நிழல் வலைக் குடில், போன்ற உயர் மதிப்பு திட்டங்களுக்கான மானியத்துடன்

கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்படும். இந்த திட்டங்கள் மேலே கூறப்பட்ட மாவட்டங்களில் அரசின் பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

**ii. நீடித்த நிலையான வருமானத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணையம்**

2023 – 2024 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தின் கீழ் 200 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் மலைவாழ் பழங்குடியின விவசாயிகளுக்கென்று வழங்கிட ரூ.60.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேலும், இத்திட்டத்தில் பயனடையும் மலைவாழ் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூபாய் முப்பதாயிரம் மானியத்துடன் கூடுதலாக 20 சதவீத மானியமாக ரூபாய் பன்னிரண்டாயிரம் மாநில நிதியிலிருந்து வழங்கப்படும்.

**இது தவிர கீழ்க்கண்ட முக்கிய திட்டங்களில் குறைந்தபட்சம் 1% நிதி ஒதுக்கீடு பழங்குடியின விவசாயிகளுக்கு வேளாண்மை - உழவர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.**

**iii. தமிழ் நாடு சிறுதானிய இயக்கம்**

சிறுதானிய இயக்க திட்டம் 2023-24 ம் ஆண்டில் சிறுதானியங்கள் பெருமளவில் சாகுபடி செய்யப்படும் 25 மாவட்டங்களைக் கொண்ட, வடக்கு, தெற்கு என்ற இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்களில் ரூபாய் 82 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பழங்குடியின விவசாயிகளுக்கு தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் மூலம் விதைகள், நுண்ணூட்டம், உயிர் உரம், வரிசை நடவு, அறுவடை மானியம் அடங்கிய சிறுதானிய தொகுப்பு 70% மானியத்தில் ஒரு தொகுப்புக்கு ரூ.4200 என்ற வீதத்தில் விநியோகம் செய்யப்படும்.

**iv. மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்**

நடப்பு 2023-24 ம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 74.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு, நெல் ஜெயராமன் மரபுசார் நெல் இரகங்கள், பாரம்பரிய நெல் விதை வங்கி பராமரிக்கும் விவசாயிகளுக்குப் பரிசு, வேளாண்மையில் சிறப்பாக செயலாற்றும் விவசாயிகளுக்கு பரிசு, குறுவைப் பருவத்தில் மாற்றுப்பயிர், நெல்லுக்குப்பின் பயிர் சாகுபடி, இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல், வேளாண் கருவிகள் வழங்குதல், உழவர் குழுக்களுக்கு இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைக்க நிதியுதவி வழங்குதல், சிறந்த அங்கக விவசாயிக்கான நம்மாழ்வார் விருது ஆகிய இனங்களுடன் நெற்பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக துத்தநாக சல்பேட் / ஜிப்சம் வழங்குதல் மற்றும்

வேளாண் விளை பொருட்களை இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாக்கவும், சேமிக்கவும் விவசாயிகளுக்குத் தார்ப்பாய்கள் வழங்குதல் ஆகிய திட்ட இனங்களோடு செயல்படுத்தப்படும்.

v. **தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

a. நெல் பரப்பு மற்றும் உற்பத்தியை மேம்படுத்துதல்.

b. மானாவாரிப்பகுதி மேம்பாடு.

c. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்.

vi. **தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்**

a. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் – அரிசி

b. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் - பயறு வகைகள்

c. நஞ்சை தரிசில் பயறு சாகுபடி திட்டம்

d. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் – மக்காச்சோளம்

e. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் – ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள்

vii. **தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் எண்ணெய்வித்துக்கள்**

a. தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் - நெல் தரிசில் எண்ணெய்வித்துக்கள் சாகுபடி திட்டம்

viii. **விதைகள் மற்றும் நடவு பொருட்களுக்கான துணை இயக்கம்**

இத்திட்டத்தில் நெல் மற்றும் சிறுதானிய விதைகளுக்கு 50% மானியத்திலும் பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்து விதைகளுக்கு 60% மானியத்திலும் விதைகள் வழங்கப்படும்.

ix. **வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை**

இந்த முகமையின் கீழ் பயிற்சி, செயல் விளக்கம் மற்றும் கண்டுணர் பயணங்கள் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மேற்கண்ட அனைத்து திட்டங்களிலும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி, சேலம், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள பழங்குடியின விவசாயிகளுக்காக ஒதுக்கப்படும் பொருள்/நிதி ஒதுக்கீடு இலக்கில் குறைந்தபட்சமாக 1 சதவீத இலக்கு

அறிவிக்கப்பட்டுள்ள மலைப்பகுதிகளில் கட்டாயமாக செயல்படுத்தப்படும். மேலும், தேவைப்படின் இம்மலைப்பகுதிகளில் உச்ச வரம்பின்றி பழங்குடியின விவசாயிகளுக்கான இலக்கும் செயல்படுத்தப்படும். இம்மலைப்பகுதிகளில் மேற்கண்டவாறு போதுமான பயனாளிகள் இல்லாத நிலையில் அந்த மாவட்டத்தில் சமவெளிப்பகுதியில் உள்ள இதர பழங்குடியின விவசாயிகளுக்கோ அல்லது பிற மாவட்ட மலைப்பகுதி பழங்குடியின விவசாயிகளுக்கோ மாற்றி செயல்படுத்தப்படும். இதற்கான விவரம் இவ்வரசாணையின் இணைப்பு-III ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**II. தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை**

**i. மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்:**

2023-24-ம் ஆண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்களின் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்காகவும், அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், காய்கறி நாற்றுகள், விதைகள் அடங்கிய வீட்டுத்தோட்டத் தளைகள் 5,000 குடும்பங்களுக்கு ரூபாய் 22 இலட்சம் நிதியில் வழங்கப்படும். இதுதவிர, அனைத்து திட்டங்களிலும் 1% நிதி ஒதுக்கீடு பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**III. வேளாண்மைப் பொறியியல் துறை:**

**i. வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டம்**

- வேளாண் இயந்திரங்கள் / கருவிகள் வாங்குவதற்கு சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண் விவசாயிகளுக்கு 50% அல்லது ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்குதல்.
- வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வாங்குவதற்கு சூரிய கூடார உலர்த்திகள் அமைப்பதற்கு ஆகும் செலவில் சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு 60% அல்லது ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்குதல்.

**ii. முதலமைச்சரின் சூரியசக்தி பம்புசெட்டுகள் திட்டம்**

- சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண் விவசாயிகள் இதர விவசாயிகளுக்கு 40% அல்லது ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை இதில் எது குறைவோ அத்தொகையினை மானியமாக வழங்குதல்.

iii. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

- தனிப்பட்டவிவசாயிகளின் நிலங்களில், பழங்குடியினருக்கு 90% மானியத்தில், மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு, நீர் மேலாண்மைப்பணிகள் மேற்கொள்ளுதல்.

iv. மானியத்தில் மின் மோட்டார் பம்புசெட்டுகள் – 2022-23

- விவசாயிகள் பாசனநீரை இறைத்திட உதவும் வகையில் 1000 சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் பம்புசெட்டுகள் அமைப்பதற்கு ரூ.150 இலட்சம் மானியமாக வழங்குதல்.

மேற்கண்ட அனைத்து திட்டங்களிலும் பழங்குடியினருக்கான 1% இலக்கு அறிவிக்கப்பட்ட மலைப்பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

IV. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

i. ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள்.

நடப்பு 2023-24ம் ஆண்டில் இத்திட்டத்தில் பயிர் சாகுபடி, கால்நடைகள் வளர்ப்பு, உயிர் உர உற்பத்தி மற்றும் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல் ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன. 20 விவசாயிகள் கொண்ட ஒரு தொகுப்புக்கு, ஒரு விவசாயிக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.20 லட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகளை ஒத்தே இருக்கின்றன.

ii. இயற்கை விவசாயக் குழுக்கள்

இயற்கை சார்ந்த பாரம்பரிய விவசாயம், இரசாயன இடு பொருட்கள் இல்லாத விவசாய முறையினை ஊக்குவிக்க 50 விவசாயிகள் கொண்ட குழுக்கள் உருவாக்கப்பட்டு ரூ.6 லட்சம் வீதம் வழங்கப்படுகிறது.

iii. சர்வதேச சிறுதானிய ஆண்டு – 2023.

2023-24 ம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் சிறுதானியங்கள் குறித்த கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் நடத்தப்படும். சிறுதானியங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வு, கண்காட்சிகள் நடத்தப்படும்.

V. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை:

2023-24 ம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலமாக பழங்குடியின விவசாயிகளுக்கென வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த செயல்களுக்காக ரூ.31.71 கோடி

ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

i. **பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தேனீ வளர்ப்பு, மருத்துவ மூலிகை வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, இயற்கை மிளகு விளைவித்தல், காளான் வளர்ப்பு, மூங்கில் தளவாடங்கள் தயாரித்தல், மற்றும் துரித உணவகங்கள் அமைத்தல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

ii. **பால்தரும் கால்நடைகளை வாங்குவதற்கான மானியத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 2023-24-ம் ஆண்டில் 50 பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.22.5 இலட்சம் வழங்கப்படுகிறது.

iii. **டிரோன்களை இயக்குவதற்கான பயிற்சி அளிக்கும் திட்டம்**

தொழில்நுட்ப கல்வித் தகுதியுடைய பழங்குடியின இளைஞர்களுக்கு வேளாண்மைத் துறையில் உயிர் உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை தெளிக்கும் டிரோன்களை இயக்குவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

iv. **அதிவிரைவு மின் இணைப்பு பெறுவதற்கான மானியத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியின விவசாயிகளுக்கு அதிவிரைவு மின் இணைப்பு பெற 90% மானியம் வழங்கப்படுகிறது.

**VI. வனத்துறை:**

i. **தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டம்**

இத்திட்டம் 2023-24 ம் ஆண்டில் ரூ.920.52 கோடி மதிப்பீட்டில் 8 வருட காலத்திற்கு (2023-24 முதல் 2029-30 வரை) செயல்படுத்தப்படுகிறது

ii. **தரங்குன்றிய காடுகளை மேம்படுத்துதல் திட்டம்:**

தமிழகத்தில் வனப்பரப்பு சிதைவடைவதைத் தடுக்க நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூ.481.148 கோடி செலவில் 2021-22 முதல் 2025-26 வரை 33,290 எக்டர் வனப்பரப்பில் 33.50 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட உள்ளன.

**VII. பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் - LAMPS (Large Area Multipurpose Societies)**

பழங்குடியின மக்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு திட்டமிடவும், அதிக வருவாய் ஈட்டவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், குறைந்தபட்ச ஆதரவு விலையின் சந்தையை மேம்படுத்தவும், 25 பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள்

உருவாக்கப்பட்டன. இந்த அமைப்பு 03.08.2022 அன்று பதிவு செய்யப்பட்டு 01.11.2022 முதல் 25 பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. 2022-23 ஆம் ஆண்டில், பெரும் பல்நோக்கு சங்கங்களுக்கு மத்திய காலக் கடன் மற்றும் சுய உதவிக் குழுக் கடனுக்கான பங்கு மூலதன உதவி மற்றும் மானியமாக ரூ.385.00 இலட்சங்களை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

3. மேற்கண்டவாறு வேளாண்மை -உழவர் நலத்துறை உள்ளிட்ட பல துறைகளிலும் பழங்குடியின வகுப்பு விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து அந்த இடைவெளிகளைக் குறைக்கும் வகையில் அனைத்து திட்டங்களையும் அந்தந்த பகுதிகளில் சிறப்பாக செயல்படும் பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து பழங்குடியின விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக சிறப்பு கவனம் செலுத்தி செயல்படுத்திட ஏதுவாக அரசாணை வழங்க வேண்டி நிதி தேவையில்லாத இக்கருத்துருவினை கீழ்க்கண்டவாறு வேளாண்மை ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

குறிக்கோள்:

i. கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன்மலை, சேலம் மாவட்டம் சேர்வராயன் மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் பச்சை மலை, தருமபுரி மாவட்டம் வத்தல் மலை, சித்தேரி, திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை, திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, ஈரோடு மாவட்டம் தாளவாடி, பர்கூர், குதியாலத்தூர் உள்ளிட்ட பல்வேறு மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின விவசாயிகள் அனைவருக்கும் அரசின் உழவர் நலத்திட்டங்களின் பலன்கள் சென்றடைவது உறுதி செய்யப்படும்.

ii. பலதுறைகளின் திட்டங்களின் பலன்களை பரவலாக்கி அதிக பழங்குடியின விவசாயிகள் பலன் பெறும் வகையில் செயல்படுத்திட வழிவகைகள் செய்யப்படும்.

iii. பிற துறைகள் செயல்படுத்தி வரும் திட்டங்களில் உள்ள இடைவெளிகளைக் குறைக்கும் வகையில் வேளாண்மை உழவர் நலத்திட்டங்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

iv. உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் பழங்குடியின விவசாயிகள் பலன் பெறுவதை ஊக்குவித்து அவர்களுக்கு கூடுதல் 20 சதவீத மானியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

v. ஒட்டு மொத்தமாக பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும்.

4. திட்ட செயலாக்கம்:-

(A) மாவட்ட அளவிலான குழு ஒன்று அமைத்தல்

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு கீழ்க்காணும் மாவட்ட தலைமை அலுவலர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள்.

(1) கூடுதல் ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்

(2) மாவட்ட திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

(3) மாவட்ட வன அலுவலர்.

(4) வேளாண்மை இணை இயக்குநர்.

(5) கூட்டுறவு இணை பதிவாளர்

(6) தோட்டக்கலை துணை இயக்குநர்

(7) செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை

(8) திட்ட அலுவலர், பழங்குடியினர் நலத்துறை

(9) திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்/ துணை ஆட்சியர்.

(10) கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்

(11) மேலாளர், மாவட்ட முன்னோடி வங்கி

(12) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)-உறுப்பினர்-செயலர்

(B) மாவட்ட அளவிலான குழுவின் பணிகள் :-

1. மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்படும் இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ள மாவட்ட அளவிலான அலுவலர்கள் தங்கள் துறையின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் பழங்குடியின விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் முழு விவரங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு அவற்றை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டத்தை வடிவமைப்பார்கள்.
2. இச்செயல் திட்டத்தின் மூலம் ஒரே வகையான திட்ட இனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் செயல்படுத்தப்படுவது கண்டறியப்பட்டு அவை ஒரு சில பயனாளிகளுக்கு மட்டும்

சென்றடையாமல் பலருக்கும் பயனடையும் வகையில் வகைபடுத்தப்படும்.

3. இச்செயல்திட்டத்தின் மூலம் தகுதியான பழங்குடியின வகுப்பு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு தகுந்த திட்டங்களில் பயனாளிகளாக சேர்க்கப்படுவார்கள்.
4. அவ்வாறு தேர்வு செய்யப்படும் பழங்குடியின விவசாயிகளுக்கு நீடித்த வேளாண்மையினை மேற்கொள்வதற்கான தகுந்த உதவிகளை இதர துறைகளின் திட்ட இனங்களிலிருந்து பெறுவதற்கான வழி வகைகள் இக்குழுவால் மேற்கொள்ளப்படும்.
5. உயர் மதிப்பு வேளாண் திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது அதற்குரிய விவசாயிகள் மானிய பங்களிப்புத் தொகையை செலுத்த கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக உரிய கடன் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.
6. இதனால் மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள், நுண்ணீர்ப்பாசனம், நீர் இறைக்கும் மோட்டார், நீர் கொண்டு செல்லும் குழாய்கள் ஆகிய திட்ட இனங்கள் பல துறைகளில் செயல்படுத்தப்படுவதால் இதன் பலன்கள் அனைத்து பழங்குடியின விவசாயிகளுக்கும் பரவலாகக் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

5. மேலும், மேற்கண்ட பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான திட்ட செயல்பாடுகளை மாநில அளவில் கண்காணிக்க இத்திட்டத்தை மாநில அளவிலான உயர் நிலைக் குழுவின் (High Level Committee) ஆய்வுக்கான ஒரு பொருளாக (Subject) சேர்த்து செயலாளர், ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அவர்களையும் உறுப்பினராக சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

6. வேளாண்மை-உழவர் நலத்துறை உள்ளிட்ட பல துறைகளிலும் பழங்குடியின வகுப்பு விவசாயிகளின் நலனுக்காக 2023-24 ம் ஆண்டு செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தையும், பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து பழங்குடியின விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான இக்கருத்துருவினை பரிசீலித்து ஆணையினை வழங்க வேளாண்மை ஆணையர் கோரியுள்ளார்.

7. வேளாண்மை ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, பின்வரும் இனங்களுக்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது:-

i. வேளாண்மை-உழவர் நலத்துறை உள்ளிட்ட பல துறைகளிலும் பழங்குடியின வகுப்பு விவசாயிகளின் நலனுக்காக, 2023-24 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தையும், பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து பழங்குடியின விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்ட செயலாக்கத்தினை செயல்படுத்த இவ்வரசாணையின் இணைப்பு-Iல் உள்ளவாறு மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான குழுவினை அமைக்கவும்,

ii. மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான குழுக்களின் பணிகளுக்கும், இவ்வரசாணையின் இணைப்பு-IIல் உள்ள இனங்களுக்கு, ஒப்புதல் வழங்கியும்,

iii. பழங்குடியின விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதாந்திர முன்னேற்ற அறிக்கையினை துறைவாரியாகவும், திட்ட வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் தொகுத்து, அரசுக்கு அனுப்பிடுமாறு வேளாண்மைத்துறை ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

வேளாண்மை ஆணையர், சென்னை-5.

இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-35.

இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை, சென்னை-32.

முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.

கூடுதல் தலைமைச் செயலர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை-9.

கூடுதல் தலைமைச் செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை-9.

செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை -9.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

நகல்:

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர்அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை - 9.

வேளாண்மை-உழவர் நலன் (வேஉ-1, வேஉ-2, வேஉ-3, வேஉ4, வேஉ5, தோக-1, தோக2, வேபொ1 மற்றும் எண்ணெய் வித்துக்கள்) துறை, சென்னை-9

வேளாண்மை-உழவர் நலத் (அ.ந.மு-3/வ மற்றும் தி) துறை, சென்னை -9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 28/11/23

28/11/23

## இணைப்பு-I

**அ.ஆ.(நிலை) எண். 259, வேளாண்மை-உழவர் நலத் (வேபொ2) துறை, நாள்28.11.2023**

**வேளாண்மை - உழவர் நலன் – பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை, இதர அரசுத் துறைகள் பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து செயல்படுவதை ஆய்வு செய்வதற்கான மாவட்ட அளவிலான குழு**

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | - | தலைவர் |
| 2 | கூடுதல் ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் | - | உறுப்பினர் |
| 3 | மாவட்ட திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | - | உறுப்பினர் |
| 4 | மாவட்ட வன அலுவலர் | - | உறுப்பினர் |
| 5 | வேளாண்மை இணை இயக்குநர் | - | உறுப்பினர் |
| 6 | கூட்டுறவு இணை பதிவாளர் | - | உறுப்பினர் |
| 7 | தோட்டக்கலை துணை இயக்குநர் | - | உறுப்பினர் |
| 8 | செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை | - | உறுப்பினர் |
| 9 | திட்ட அலுவலர், பழங்குடியினர் நலத்துறை | - | உறுப்பினர் |
| 10 | திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்/துணை ஆட்சியர். | - | உறுப்பினர் |
| 11 | கண்காணிப்பு பொறியாளர், தமிழ் நாடு மின்சார வாரியம் | - | உறுப்பினர் |
| 12 | மேலாளர், மாவட்ட முன்னோடி வங்கி | - | உறுப்பினர் |
| 13 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) | - | உறுப்பினர்-செயலர் |
| 14 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வரும், திருச்சி, நாமக்கல், சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் தருமபுரி ஆகிய ஏழு மாவட்டங்களின் சம்பந்தப்பட்ட 7 (ஏழு) திட்ட அலுவலர்கள். எஞ்சிய மாவட்டங்களில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர்கள். | - | உறுப்பினர் |
| 15 | மாவட்ட மேலாளர், தாட்கோ (வாழ்வாதாரம்/பயிற்சி மற்றும் வரவு தொடர்பான இணைப்புகளுக்கு பொறுப்பானவர்) | - | உறுப்பினர் |

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல் //

பிரிவு அலுவலர் 28/11/23

இணைப்பு-II

அ.ஆ.(நிலை) எண். 259, வேளாண்மை-உழவர் நலத் (வேபொ2) துறை, நாள்28.11.2023

மாவட்ட அளவிலான குழுவின் பணிகள் ;-

1. மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்படும் இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ள மாவட்ட அளவிலான அலுவலர்கள் தங்கள் துறையின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் பழங்குடியின விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் முழு விவரங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு அவற்றை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டத்தை வடிவமைப்பார்கள். மாவட்ட அளவிலான குழு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
2. இச்செயல் திட்டத்தின் மூலம் ஒரே வகையான திட்ட இனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் செயல்படுத்தப்படுவது கண்டறியப்பட்டு அவை ஒரு சில பயனாளிகளுக்கு மட்டும் சென்றடையாமல் பலருக்கும் பயனடையும் வகையில் வகைபடுத்தப்படும்.
3. இச்செயல்திட்டத்தின் மூலம் தகுதியான பழங்குடியின வகுப்பு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு தகுந்த திட்டங்களில் பயனாளிகளாக சேர்க்கப்படுவார்கள்.
4. அவ்வாறு தேர்வு செய்யப்படும் பழங்குடியின விவசாயிகளுக்கு நீடித்த வேளாண்மையினை மேற்கொள்வதற்கான தகுந்த உதவிகளை இதர துறைகளின் திட்ட இனங்களிலிருந்து பெறுவதற்கான வழி வகைகள் இக்குழுவால் மேற்கொள்ளப்படும்.
5. உயர் மதிப்பு வேளாண் திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது அதற்குரிய விவசாயிகள் மானிய பங்களிப்புத் தொகையை செலுத்த கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக உரிய கடன் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.
6. இதனால் மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள், நுண்ணீர்ப்பாசனம், நீர் இறைக்கும் மோட்டார், நீர் கொண்டு செல்லும் குழாய்கள் ஆகிய திட்ட இனங்கள் பல துறைகளில் செயல்படுத்தப்படுவதால் இதன் பலன்கள் அனைத்து பழங்குடியின விவசாயிகளுக்கும் பரவலாகக் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல் //

பிரிவு அலுவலர் 28/11/23

இணைப்பு-III

அ.ஆ.(நிலை) எண்.259, வேளாண்-உழவர் நலத் (வேபொ2) துறை, நாள். 28.11.2023

மலைப்பகுதிகளில் பழங்குடியின விவசாயிகளுக்கான உத்தேச பொருள் இலக்கு ஒதுக்கீடு விவரம்

| வ.எண் | திட்டம் | ஏலகிரி- திருப்பத்தூர் | | கல்வராயன் மலை கள்ளக்குறிச்சி | | சித்தேரி வத்தல்மலை தர்மபுரி | | கொல்லி மலை நாமக்கல் | | பச்சைமலை திருச்சி | | தாளவாடி ஈரோடு | | ஜவ்வாது மலை திருவண்ணா மலை | | கல்வராயன் மலை சேலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பொருள் இலக்கு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு | மாவட்ட இலக்கு | மலைப்பகுதிக்கான ஒதுக்கீடு |
| 1. | தமிழ் நாடு சிறுதானிய இயக்கம் | | | | | | | | | | | | | | | | |
| | பழங்குடியின விவசாயிகளுக்கு - சிறுதானிய தொகுப்பு விநியோகம் | 0 | 0 | 200 | 2 | 200 | 2 | 300 | 3 | 200 | 2 | 200 | 2 | 300 | 3 | 300 | 3 |
| 2. | கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் -2023-24 | | | | | | | | | | | | | | | | |
| | தென்னங்கன்றுகள் விநியோகம் (எண்கள்) | 240 | 3 | 1304 | 13 | 1094 | 11 | 1190 | 12 | 498 | 5 | 201 | 2 | 2200 | 22 | 1544 | 15 |

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திரவ உயிர் உரம் விநியோகம் (எக்டர்) | 28 | 0.2 | 139 | 1.39 | 114 | 1.14 | 126 | 1.26 | 58 | 0.5 | 29 | 0.3 | 303 | 3.0 | 175 | 1.75 |
| | விசைத் தெளிப்பான் விநியோகம் (எண்கள்( | 2 | 1 | 11 | 1 | 9 | 1 | 10 | 1 | 5 | 1 | 3 | 1 | 26 | 1 | 16 | 1 |
| 3. | **மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்** | | | | | | | | | | | | | | | | |
| | நெல்ஜெயராமன் மரபுசார் நெல்இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்(Kg) | 80.0 | 0.8 | 30.0 | 0.3 | 40.0 | 0.4 | 240.0 | 2.4 | 90.0 | 0.9 | 60.0 | 0.6 | 330.0 | 3.30 | 270.0 | 2.70 |
| | வேளாண் கருவிகள் வழங்குதல் | 10 | 1 | 25 | 1 | 12 | 1 | 10 | 1 | 8 | 1 | 10 | 1 | 25 | 1 | 10 | 1 |
| | விவசாயிகளுக்குத் தார்ப்பாய்கள் வழங்குதல் | 10 | 1 | 16 | 1 | 14 | 1 | 22 | 1 | 26 | 1 | 24 | 1 | 17 | 1 | 29 | 1 |
| | நெல்பயிருக்கு துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் இடுதலை ஊக்குவித்தல் (எக்டர்) | 14 | 0.14 | 17 | 0.17 | 14 | 0.14 | 17 | 0.17 | 40 | 0.4 | 26 | 0.26 | 26 | 0.26 | 17 | 0.17 |

| | | |
|---|---|---|
| 4. | **தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்** | |
| | நெல் பரப்பு மற்றும் உற்பத்தியை மேம்படுத்துதல் | பழங்குடியின விவசாயிகளுக்காக ஒதுக்கப்படும் பொருள்/நிதி ஒதுக்கீடு இலக்கில் குறைந்தபட்சமாக 1 முதல் 2 சதவீத இலக்கு மலைப்பகுதிகளில் கட்டாயமாக செயல்படுத்தப்படும். மேலும், தேவைப்படின் இம்மலைப்பகுதிகளில் உச்ச வரம்பின்றி மாவட்டத்திற்கான பழங்குடியின விவசாயிகளுக்கான இலக்கு செயல்படுத்தப்படும். |
| | மானாவாரி பகுதி மேம்பாடு | |
| | பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் | |
| 5. | **தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்** | |
| | பயறு வகைகள் | பழங்குடியின விவசாயிகளுக்காக ஒதுக்கப்படும் பொருள்/நிதி ஒதுக்கீடு இலக்கில் குறைந்தபட்சமாக 1 முதல் 2 சதவீத இலக்கு அறிவிக்கப்பட்டுள்ள மலைப்பகுதிகளில் கட்டாயமாக செயல்படுத்தப்படும். மேலும், தேவைப்படின் இம்மலைப்பகுதிகளில் உச்ச வரம்பின்றி மாவட்டத்திற்கான பழங்குடியின விவசாயிகளுக்கான இலக்கு செயல்படுத்தப்படும். |
| | மக்காச்சோளம் | |
| | சிறுதானியங்கள் | |

| | | |
|---|---|---|
| 6. | **தேசிய சமையல் எண்ணைய் இயக்கம் – எண்ணைய்வித்துக்கள்** | |
| | தேசிய சமையல் எண்ணைய் இயக்கம் - நெல் தரிசில் எண்ணைய்வித்துக்கள் சாகுபடி திட்டம் | பழங்குடியின விவசாயிகளுக்காக ஒதுக்கப்படும் பொருள்/நிதி ஒதுக்கீடு இலக்கில் குறைந்தபட்சமாக 1 முதல் 2 சதவீத இலக்கு அறிவிக்கப்பட்டுள்ள மலைப்பகுதிகளில் கட்டாயமாக செயல்படுத்தப்படும். மேலும், தேவைப்படின் இம்மலைப்பகுதிகளில் உச்ச வரம்பின்றி மாவட்டத்திற்கான பழங்குடியின விவசாயிகளுக்கான இலக்கு செயல்படுத்தப்படும். |
| 7. | **விதைகள் மற்றும் நடவு பொருட்களுக்கான துணை இயக்கம்** | பழங்குடியின விவசாயிகளுக்காக ஒதுக்கப்படும் பொருள்/நிதி ஒதுக்கீடு இலக்கில் குறைந்தபட்சமாக 1 முதல் 2 சதவீத இலக்கு அறிவிக்கப்பட்டுள்ள மலைப்பகுதிகளில் கட்டாயமாக செயல்படுத்தப்படும். மேலும், தேவைப்படின் இம்மலைப்பகுதிகளில் உச்ச வரம்பின்றி மாவட்டத்திற்கான பழங்குடியின விவசாயிகளுக்கான இலக்கு செயல்படுத்தப்படும். |
| 8. | **வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை** | பழங்குடியின விவசாயிகளுக்காக ஒதுக்கப்படும் பொருள்/நிதி ஒதுக்கீடு இலக்கில் குறைந்தபட்சமாக 1 முதல் 2 சதவீத இலக்கு அறிவிக்கப்பட்டுள்ள மலைப்பகுதிகளில் கட்டாயமாக செயல்படுத்தப்படும். மேலும், தேவைப்படின் இம்மலைப்பகுதிகளில் உச்ச வரம்பின்றி மாவட்டத்திற்கான பழங்குடியின விவசாயிகளுக்கான இலக்கு செயல்படுத்தப்படும். |

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல் //

பிரிவு அலுவலர் 28/11/23

28/11/23